சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். 432/2015

**PW 1 தங்கவேல்** **10.09.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் மின் நகரில் எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறேன் என கேட்டால் 35 வருடமாக குடியிருந்து வருகிறேன். எனது பாட்டனார் பெயர் மூலன்செட்டியார் என்று சொன்னால் சரிதான். எனது பாட்டனாருக்கு எத்தனை வாரிசுகள் என கேட்டால் 2 வாரிசுகள் உண்டு, அவர்கள் பெயர் கருப்பஞ்செட்டியார் மற்றும் திருமூர்த்தி செட்டியார் ஆவார். அதில் திருமூர்த்தி செட்டியார் எனது தகப்பனார். மூலன்செட்டியாரின் மனைவி தான் ரங்கம்மாள் என்று சொன்னால் சரிதான். மூலன்செட்டியாருக்கு ரங்கம்மாளை தவிர வேறு மனைவி உண்டா என்றால் உண்டு அவர் பெயர் தேவகியம்மாள். பிரதிவாதிகள் யார் என கேட்டால் 1 ம் பிரதிவாதி எனது அண்ணன் நடராஜ் செட்டியாரின் மனைவி அவரது வாரிசுகள் தான் 2 முதல் 5 பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆதியில் ரங்கம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். ரங்கம்மாளுக்கு தாவா சொத்துக்கள் அல்லாமல் வேறு சொத்துக்கள் உண்டு என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ரங்கம்மாள் எப்போது இறந்தார் என கேட்டால் 1975 ல்

இறந்துவிட்டார், ரங்கம்மாள் இறப்பதற்கு முன்பு எனக்கும் எனது அண்ணனுக்கும் உயில் எழுதிவைத்திருந்தார்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி